## பட்டை

### 1.பட்டை வண்ணத்துப்பூச்சி: *கைலாசா கிளைட்டியா*

**சேதத்தின் அறிகுறிகள்**

- புழுக்கள் இலைகளை கடித்துச் சேதப்படுத்தும்.
- கடும் தாக்குதலின் போது இலைகளின் மத்திய நரம்புப் பகுதி மட்டும் இருக்கும்.

**பூச்சியின் விபரம்**

**முட்டை:** வெளிர் மஞ்சள் நிறம்

**புழு**

- வளர்ந்த புழுக்கள் நிழலில் பார்க்கும் பொழுது பக்கவாட்டில் மஞ்சளாக இருக்கும்.
- புழுக்கள் கருநிற வெண் திட்டுக்களுடன் இருக்கும்.

**பூச்சி**

- வண்ணத்துப்பூச்சி வெல்வெட் பழுப்பு நிறத்தில் இருக்கும்.
- இறக்கைகளில் வெண்புள்ளிகளும், மஞ்சள் மற்றும் வெண்ணிறக் கோடுகளும் காணப்படும்.

**கட்டுப்படுத்தும் முறைகள்**

- குவினால்ஃபாஸ் 0.05 சதவிகிதம் தெளிக்கலா◌ாம்.

### 2.இலைத்துளைப்பான்: *கோனோஃபோமார்பா சிவிக்கா*

**சேதத்தின் அறிகுறிகள்**

- புழுக்கள் இளம் இழையின் மேற்புறத் தோலுக்கும் கீழ்ப்புறத்தோலுக்கும் இடையில் உள்ள திசுக்களை உண்டு சேதப்படுத்தும். மேலும் வெண்ணிற கொப்பளத் திட்டுக்களை உருவாக்கும்.

- தாக்கப்பட்ட இலைகள் சுருங்கி காணப்படும். இலைத்துளைகள் இணைந்து பெரிய துளையை இலையில் ஏற்படுத்தும்.

**பூச்சியின் விபரம்**

- வளரும் புழுக்கள் சாம்பல் நிறமாகவும் பிறகு இளஞ்சிவப்பு நிறமாக மாறிவிடும்.
- சாம்பல் நிற அந்துப்பூச்சி

**கட்டுப்படுத்தும் முறைகள்**

- குவினால்ஃபாஸ் 0.05 சதவிகிதம் பூச்சிக்கொல்லியை இளம் தளிர்கள் மீது தெளிக்கவும்.